(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 50.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 டிசெம்பர் 06, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

---

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

*பாராளுமன்றச் சபை முதல்வர்,—* பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2022 டிசெம்பர் 13 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

2.

*பாராளுமன்றச் சபை முதல்வர்,—* பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் 2022 ஒக்தோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2022 டிசெம்பர் 13 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

*பாராளுமன்றச் சபை முதல்வர்,—* பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2022 டிசெம்பர் 08 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

*பாராளுமன்றச் சபை முதல்வர்,—* சிறப்புரிமைகள்,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த அவர்களால் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2022 டிசெம்பர் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

5.

*பாராளுமன்ற சபை முதல்வர்,—* வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 122 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 நவம்பர் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 டிசெம்பர் 05 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒன்பதாவது பாராளுமன்றத்தில் மூன்றாவது கூட்டத்தொடரில் சேவையாற்றுவதற்காக வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினேழு (17) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

6.

*பாராளுமன்ற சபை முதல்வர்,—* பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 123 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 நவம்பர் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 டிசெம்பர் 05 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒன்பதாவது பாராளுமன்றத்தில் மூன்றாவது கூட்டத்தொடரில் சேவையாற்றுவதற்காக பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினேழு (17) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

7.

பாராளுமன்ற சபை முதல்வர்,— வழிவகைகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 124 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 நவம்பர் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 டிசெம்பர் 05 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒன்பதாவது பாராளுமன்றத்தில் மூன்றாவது கூட்டத்தொடரில் சேவையாற்றுவதற்காக வழிவகைகள் பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினேழு (17) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட பத்தொன்பதாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, டிசெம்பர் 05).

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ், பெறுமதி சேர் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 2295/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ், பெறுமதி சேர் வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2300/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 2295/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— *சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,*— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, *சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 2295/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் வர்த்தக மையங்கள் ஒழுங்குவிதிகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 2292/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2300/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மே 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பெருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 யூன் 24 ஆம் திகதிய 2285/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதிய 2302/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதிய 2304/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதிய 2304/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 2292/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 03 ஆம் திகதிய 2295/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதிய 2298/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 2301/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் செஸ் அறவீடு தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2300/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10(அ) ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10(அ) ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2022.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2022 ஒக்தோபர் 06 ஆம் திகதிய 2300/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 2294/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2300/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அரச துறை உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதினை 60 ஆகக் குறைத்தல் - 22/1480/601/012 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சேவைகள்/பதவிகளுக்கு ஏற்புடையவாறு கட்டாயமாக ஓய்வு பெற வேண்டிய வயதெல்லைகளைக் கருத்திற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சர் குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மீதான தீர்மானம்,—

அரச துறை உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதினை 60 ஆகக் குறைப்பது சம்பந்தமாக பிரதம அமைச்சர் மற்றும் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.09.09 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைப/22/1403/605/014 ஆம் இலக்க, 2022.09.12 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் 2022.09.22 ஆம் திகதிய 02 அமைச்சரவைக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.09.22 ஆம் திகதிய மேற்குறித்த அமைச்சரவைக் குறிப்பு சம்பந்தமான அமைப/22/1480/601/012 ஆம் இலக்க, 2022.10.03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் ஊடாக, அந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்கு/பதவிகளுக்கு ஏற்புடைய கட்டாய ஓய்வு பெறும் வயதினை, அதில் முன்மொழியப்பட்டுள்ளவாறு திருத்தியமைப்பது சம்பந்தமாக விடயங்களை மேலும் ஆராய்ந்து அமைச்சரவைக்குப் பொருத்தமான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையிலான அமைச்சர் குழுவொன்றை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதம அமைச்சரின் தலைமையிலான மேற்குறித்த அமைச்சர் குழு ஏற்புடைய விடயங்களை ஆராய்ந்து தமது விதந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையினை 2022.10.10 ஆம் திகதிய அமைச்சரவைக் குறிப்பு ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதுடன், அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் ஊடாக பின்வரும் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

1. விசேட வைத்திய அதிகாரிகள், அரச வைத்திய அதிகாரிகள், பல் வைத்திய அதிகாரிகள் மற்றும் அரசில் பதிவுசெய்த வைத்திய அதிகாரிகளுக்கு மாத்திரம் ஏற்புடையவாறு, அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் (II) (அ), (ஆ) இல் குறிப்பிடப்படுகின்றவாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு உட்பட்ட வகையில், அமைச்சர் குழு அறிக்கையின் (அ) முதல் (உ) வரையான விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.

அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் (II) (அ), (ஆ) உட்பிரிவுகள் :-

(அ) ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் யூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தமது பிறந்தநாள் காணப்படுகின்ற வைத்தியர்களுக்கு ஏற்புடைய ஆண்டின் ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரை சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஓய்வு பெறச் செய்தல்,

(ஆ) ஜூலை மாதம் 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி திகதி வரையான காலப்பகுதியினுள் தமது பிறந்தநாள் காணப்படுகின்ற வைத்தியர்களுக்கு ஏற்புடைய ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஓய்வு பெறச் செய்தல்,

அமைச்சர் குழு அறிக்கையின் (அ) முதல் (உ) வரை குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகள்:-

(அ) ஏலவே 63 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை எதிர்வரும் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்பு ஓய்வு பெறச் செய்தல்,

(ஆ) தற்போது 62 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 63 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(இ) தற்போது 61 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 62 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(ஈ) தற்போது 60 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 61 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(உ) தற்போது 59 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 60 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஏனைய அரச உத்தியோகத்தர்களைப் போன்று ஓய்வு பெறச் செய்தல்.

அந்தக் குறிப்பின்படி, விதந்துரைக்கப்பட்ட வைத்தியர்களை ஓய்வு பெறச் செய்யும் இடைக்கால நடவடிக்கைகள் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடைய வேண்டும் என்பதுடன், அதன் பின்பு ஏனைய சகல அரச உத்தியோகத்தர்களையும் போன்று வைத்திய அதிகாரிகளும் 60 வயது பூர்த்தியடையும்போது ஓய்வு பெற வேண்டும் என்பது.

2. பிரேரணை அங்கீகாரத்திற்கு அனுமதி கிடைத்த பின்பு, மேற்குறித்த தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடையவாறு பொருத்தமான முறையில் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தியமைத்தல்.

மேற்குறித்த அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப, மேலே 1 மற்றும் 2 இல் உள்ளவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

31.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

ருஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---